# விடுதலைப் புலிகள் இயக்கத்தைப்போல் ஏனைய இயக்கங்கள் அரசில் நம்பிக்கை வைக்கவில்லை!

(கொழும்பு)

-ரஞ்சன்

''விடுதலைப்புலிகள் இயக்கம் அரசாங்கத்தில் நம்பிக்கை வைத்து பேச்சுவார்த்தை நடாத்துகிறது. ஆனல் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கமோ இந்தியாவையே நம்புகிறது. ஆயினும், அவ்இயக்கத்தின் கோரிக்கைக்கு ஏற்ப அரசாங்கம் அடுத்தமாதம் 15ம் திகதி சந்திப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பளித்துள்ளது''.

அமைச்சரவைக் கூட்டத்தை

(8ம் பக்கம் பார்க்க)

நூல்வெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | சித்திரை: 14 | ஷவ்வால் பிறை: 1 | இதழ்: 74
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 27-04-1990

## யாழ். பல்கலைக்கழக அபிவிருத்தியில் ஆணைக்குழு அசமந்தப்போக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினை அபிவிருத்தி செய்வதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அசமந்தப்போக்கினை கொண்டிருப்பதாக யாழ் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விடயத்தில் மத்திய அரசின் அதிகார மையங்கள் அலட்சியமாக நடந்து கொள்கின்றன. என்று பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்

அபிவிருத்தி முயற்சிகளில் சுணக்கம் ஏற்படுவதால் பல்கலைக்கழக வளர்ச்சி தடை செய்யப்படுவதாக குற்றம் சாட்டப்படுகிறது.

இதேவேளை யாழ். பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட

(8ம் பக்கம் பார்க்க)

# ★ 6-வது திருத்தசட்டத்தைநீக்குவதுதொடர்பாக தேசிய இனப் பிரச்சனைக்கு

## ஆளும் கட்சி எதிர்க்கட்சி ஒன்றிணைந்து தீர்வுகாண வேண்டும்

### பாராளுமன்றத்தில் ஈ. ஐ. முன்னணி எம்.பி. சேகு தாவுத் பஷிர்

(கொழும்பு)

"ஆறுவது திருத்தச்சட்டம் நீக்குவது தொடர்பாக பெரும்பான்மை வாக்குகள் பெறுதல் என்பதில் சில சமயங்களில் நடைமுறை சிக்கல்கள் ஏற்படலாம். ஆனல் சகல எதிர்க்கட்சிகளும், ஆளும் கட்சியும் இந்த விடயத்தில் ஒன்றிணைந்து தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணுகின்ற பணியில் ஒத்துழைத்து இந்நாட்டின் அனைத்து மக்களுக்கும் சமாதானத்தையும், அமைதியையும் ஏற்படுத்துவதில் தடைக்காரணிகளாக உள்ளவற்றை தகர்த்தெறிந்து வரலாற்றுக்கு பெருமை சேர்க்கவேண்டும். இந்த விடயத்தில் அரசியல் நிறங்களை முன்னணிப்படுத்தி பிரிந்து நின்று வேடிக்கை காட்டுவது எந்தச் சிங்கள பெரும்பான்மை அரசியல் கட்சிகளும் இனப்பிரச்சனைக்கான தீர்வை விரும்பவில்லை என்கின்ற தேசிய வரலாற்றுப்பழியினை சுமக்கநேரிடும்".

இவ்வாறு ஈழவர் ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் சேகு தாவுத் பஸிர் நேற்று அவசரகால சட்டம் நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பாராளுமன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இந்த பாராளுமன்றத்தில் மாதாமாதம் நடைபெறுகின்ற அவசரகாலச் சட்டத்

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல் தொழில் நுட்ப நிறுவனத்தில் மீண்டும் மாலைநேரவகுப்பு நடைபெறுகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் கடந்த ஆறு ஆண்டுகளாக நடைபெருமல் இருந்த மாலைநேர வகுப்புகள் இப்பொழுது மீண்டும் ஒழுங்காக நடைபெறுகின்றன.

மாலைநேர வகுப்புக்கள் பிற்பகல் 4.30 மணி தொடங்கி மாலை 6.45 மணிவரை நடைபெறுகிறது.

இதன் பொருட்டு யாழ். பல் தொழில் நுட்ப நிறுவன அதிபர் திரு. சி. இராஜேந்திரா மீண்டும் 808 பிறவுண் வீதி காலை, மாலை பஸ் சேவைகளை ஆரம்பிக்கும்படி வடபிராந்

(8-ம் பக்கம் பார்க்க)

## நிதர்சனம் பாடல்ஒலிப்பதிவு நாடாக்கள் விற்பனை

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் பாடல் ஒலிப்பதிவு நாடாக்களைப் பெற விரும்புவோர் நிதர்சனம் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

நிதர்சனப் பாடல்களில் தேனிசை செல்லப்பா, வாணி ஜெயராம், டினேஷ், மனோ, விக்கினராஜா ஆகியோர் பாடிய எழுச்சிப் பாடல்கள் பதியப்பட்டுள்ளன. ஒரு ஒலிப்பதிவு நாடாவின் விலை 50 ரூபாவாகும்.

இந்த ஒலிப்பதிவு நாடாவில் உள்ள பாடல்களை எவரும் ஒலிப்பதிவு செய்யவேண்டாமென்றும் தனிப்பட்டவர்கள் இதை விற்பனை செய்யவேண்டாமென்றும் நிதர்சனம் பொறுப்பாளர் திரு. இ. பரதன் தெரிவித்துள்ளார்.

தமிழீழவிடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனின் படமும் நிதர்சனம் பாடல்கள் என்ற வாசகமும் ஒலிப்பதிவு நாடாவின் முகப்புப் பகுதியில் உள்ளது. [153]

## இனப்பிரச்சனை தொடர்பாக ஜனதிபதியின் சமாதான முயற்சி வெற்றிபெறவேண்டும்!

### ஈ.ஐ. முன்னணியின் மேதினச் செய்தி

(யாழ்ப்பாணம்)

''இலங்கைத் தீவில் நெருக்கடி தணிந்து சமாதானத்தை நோக்கி நாடுசென்றுகொண்டிருக்கும் இத்தருணத்தில் இலங்கை ஜனதிபதியின் புதிய அணுகுமுறையால் இனப்பிரச்சனை தீர்க்கப்படும் என தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். இப்பிரச்சனையில் ஜனதிபதியின் சமாதானமுயற்சி வெற்றிபெறவேண்டும் அதேசமயம் தமிழ் பேசும் மக்களுக்கான ஒட்டுமொத்த அரசியல் தீர்வுகாண அரசமைப்பையும் உருவாக்க வேண்டும்''

இவ்வாறு 'ஈழவர்ஜனநாயக முன்னணி விடுத்த மேதின அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்தாவது:-

(7-ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் அன்பர்களுக்கு 'ஈழநாடு' தனது ஈதுல்பித்ர் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறது.

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தெங்கு பனம்பொருள் உ. வி. கூ. சங்கங்களுக்கான மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப்பரீட்சை நாளை மறுதினம் 29-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.

விண்ணப்பதாரர்களுக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## 100 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

(கொழும்பு)

புனித ரம்ழான் பண்டிகையை முன்னிட்டு சிறைக் கைதிகள் 100 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும்என்று

(8-ம் பக்கம் பார்க்க)

## தென்னியன் குளத்தில் பல்லவர், சோழர் கால கலை மரபைச்சேர்ந்த கட்டடத்தொகுதிகள் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

பல்லவர் காலம் அல்லது சோழர் கால சிற்பகலை மரபைச்சேர்ந்த கருங்கற்கள் கட்டிட இடிபாடுகள் மூங்குவில்-செழியாவில் காட்டுப் பிரதேசத்தின் நடுவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

கடந்த 24-ம் திகதி யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை விரிவுரையாளர் ப. புஸ்பரத்தினம் தலைமையில் பூநகரி ப. நோ. கூ. சங்க அலுவலரும், கிராம வாசிகள் சிலரும் தென்னியன் குளத்திலிருந்து காட்டுக்குள் இரண்டு மைல தூரத்திலுள்ள மூங்குவில்செழியாவில் என்ற இடத்திற்குச் சென்று நாலு கருங்கறகள் கட்டிடத் தொகுதிகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதுகுறித்து விரிவுரையாளர் ப. புஸ்பரத்தினம் தெரிவித்துள்ளதாவது:

முழங்காவிலில் இருந்து பண்ணிரண்டு மைல்தொலைவில் தென்னியன்குளம் அமைந்துள்ளது. மூங்குவில்-செழியாவிலில் தனிக்கருங்கற்களி

(8-ம் பக்கம் பார்க்க)

## நினைவாலயத்தில் மலர் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் பதின்மூன்ருவது நினைவு தினமான நேற்று தந்தை செல்வா நினைவாலயத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

தந்தை செல்வாவின் நீண்ட

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

செல்வி ஆ. குமாரசாமியின் நடனக் குறிப்புகள் அடங்கிய (N. C. O. M. S. 6th Grade) புத்தகம் 17-04-90ல் யா/மத்திய கல்லூரியில் தவறிவிட்டது. கண்டவர்கள் ''ஈழநாடு'' காரியாலயத்தில் அல்லது யா/இராமநாதன்கல்லூரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும். சி. குமாரசாமி, கல்யாணி, லோட்டன் வீதி, மானிப்பாய்.

(சி—3792)


# தொழிலாளர் ஆலோசனைச் சபை விரைவில் அமைக்கப்படும்

## — அமைச்சர் தகவல்

(கொழும்பு)

தேசிய தொழிலாளர் ஆலோசனைச்சபைஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

தொழில், தொழில் முன்னணி பயிற்சி தொடர்பான அமைச்சர் திரு. ஈ. எம். பிரேமசந்திரா இதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளார். இவ் ஆலோசனைச் சபைக்கு தொழில் அமைச்சரே தலைமை தாங்குவார்.

தொழிற்சங்கங்கள் வர்த்தக சம்மேளங்களின் பிரதிநிதிகள் இச்சபையில் அங்கத்துவம் வகிப்பார்கள்.

தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட சட்டங்களைத் தயாரிக்கும் போதும், தொழிலாளர்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்படும் போதும் இச்சபையின் ஆலோசனைகள் பெறப்படும்.

தேசிய தொழிலாளர் ஆலோசனைச் சபை அமைக்கப் படுவதையிட்டு தொழிற்சங்கங்கள் மத்தியில் பிரசாரம் செய்வதற்கு வெகுவிரைவில் கலந்தாலோசனைக் கூட்டம் நடாத்தப்படவுள்ளது;

தொழில் வாய்ப்பு அளிப்போர் தொழிலாளர் அனைவருக்கும் நலன் கிடைக்கும் வகையில் இத்தகைய தேசிய தொழிலாளர் ஆலோசனைச் சபைகள் தற்போது மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (அ)

# புங்குடுதீவில் கொள்ளைச் சம்பவம்

(புய்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதியில் கடந்த சில நாட்களாகக் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன

புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்திலுள்ள ஒரு சங்கக் கடை கடந்த சனிக்கிழமை உடைக்கப்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் உட்படக் குழந்தைகளுக்கான பால்மா வகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன மேலும்கொள்ளை போன பொருட்கள் சுமார் ஏழாயிரம் ரூபாவென தெரிய வருகிறது.

புங்குடுதீவிலுள்ள உல்லன் பகுதியிலுள்ள இரத்தினம் என்பவரின் பலசரக்குக் கடை ஒன்றிலும் கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. [101)

# தொழில் முயற்சி வீடு திருத்தல் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி பிரதான வீதிக் கிளையில் இம்மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொழில் முயற்சிக்கான நிவாரணமும், வீடு திருத்துவதற்கான நிவாரணமும் வழங்கப்படவுள்ளன.

மக்கள் வங்கி பிரதான வீதிக் கிளையில் காலை 8-30 மணி முதல் 1-00 மணி வரை நிவாரணப்பணம்கீழ்க்காணும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு வழங்கப்படவுள்ளது.

உற்பத்தி முயற்சிக்கான நன்கொடைப் பணம் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, உடுவில் தெற்கு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும், வீடு திருத்துவதற்கான நன்கொடைப் பணம் ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

# 'அருள்மனை' சிறுவர் இல்லத்துக்கு ரூபா 20 லட்சம் செலவில் மாடிக் கட்டடம்

(பண்டத்தரிப்பு)

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். அத்தியட்சகர் ஆதீனத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் மானிப்பாய் 'அருள் மனை' சிறுவர் இல்லத்திற்குச் சுமார் 20 லட்சம் ரூபா செலவில் 2 மாடிக் கட்டடமொன்று அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டட வேலைகள் துரிதகதியில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இது றித் தெரிவிக்கப்படுகிறது.(72

# விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இவ் விபத்தில் தெல்லிப்பளை விழிசிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி தர்மலிங்கம் வயது (32) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இவ் விபத்தில் அராலியைச் சேர்ந்த கந்தசாமி கோபாலசிங்கம் (வயது 32) என்பவரே படுகாயமடைந்தவராவார். காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

# மதி நினைவாக மாட்டு வண்டிச் சவாரி

(இளவாலை)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் யாழ். மாவட்டத் தளபதி லெப். கேர்ணல் மதியின் ஞாபகார்த்தமாக கீரிமலையில் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி நடைபெறவுள்ளது.

கீரிமலை மதிவிளையாட்டுக் கழகத்தினர் நடத்தும் இம் மாட்டு வண்டிச் சவாரி நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (138)

# இலங்கை வங்கியின் நாளைய கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் ஒரு மணி வரை பின்வரும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**மீளக்குடியமர்தல் 2-ம் கட்ட நிவாரணம் 1000 ரூபா**

அரியாலை கிழக்கு, அரியாலை மத்தி, வண். வடமேற்கு, வண். வடகிழக்கு, கந்தர் மடம், நல்லூர் வடக்கு, திருநெலவேலி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் மத்தி

**மீளக்குடியமர்தல் நிவாரணம் 2000 ரூபா**

கொழும்புத்துறை, அத்தியடி, சுண்டிக்குளி, குருநகர் மேற்கு, குருநகர் கிழக்கு, யாழ்.பட்டினம், பெரியகடை, கொட்டடி, நாவாந்துறை, சோனக தெரு, அரியாலை கிழக்கு, அரியாலை மேற்கு, அரியாலை மத்தி, நல்லூர் வடக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் சிழக்கு, கந்தர் மடம், நல்லூர்தெற்கு, வண். வட. கிழக்கு.

**உற்பத்தித் திறன் முயற்சி நன்கொடை ரூபா 4000**

கந்தர்மடம், திருநெல்வேலி கிழக்கு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் மத்தி, கோண்டாவில் கிழக்கு, வண். வட மேற்கு, வண். வட கிழக்கு, நல்லூர் தெற்கு, நல்லூர் வடக்கு, அரியாலை மத்தி.

மேற்படி கொடுப்பனவுகள் பெறத் தகுதியுள்ளவர்கள் தங்கள் பகுதிக் கிராமசேவையாளருடன் தொடர்பு கொண்டு வங்கிப் பதிவு இலக்கத்தினைப் பெற்றுக்கொண்டு வந்து கொடுப்பனவுகளை இத்தினத்தில் தவறாது பெற்றுக்கொள்ளுமாறு வங்கி முகாமையாளர் திரு. செல்லப்பா சம்பந்தநாதன் அறிவித்துள்ளார்

# தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கணவனின் விருப்பத்துக்கு மாறாக மனைவி வெளிநாடு சென்றதைப் பொறுக்க முடியாத கணவன் விரக்தியுற்று கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

உடுப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நவக்கிரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கருணாநிதி (வயது 34) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே தற்கொலை செய்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக இடம்பெற்ற மரணவிசாரணையில் சாட்சியமளித்த கருணாநிதியின் தாயார் இறந்தவரின் மனைவி தனது சொல் கேளாமல் வெளிநாட்டுக்குச் சென்ற நாளிலிருந்து அவர் விரக்தியுற்றிருந்ததாகவும், தான் மருந்து குடிக்கப்போவதாகத் தன்னிடம் இரண்டு மூன்று தடவை தெரிவித்ததாகவும் கூறினார்.

இது தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ்.எஸ். பிரான்சீஸ் மேற்கொண்டார். யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் திரு. நல்லதம்பி சசிராட்களை நெறிப்படுத்தினார்.

விசாரணை முடிவில் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (56)

# விளையாட்டு விழா

(இளவாலை)

சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூகநிலையத்தின் 24–வது விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை நிலையத் தலைவர் திரு. வே. தம்பிரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது

விளையாட்டு விழாவிற்கு பிரதம விருந்தினராக ..வலி. தெற்கு உதவி அரசாங்க அதிபரும், விசேட ஆணையாளருமான திரு. ஆ. மகாலிங்கம் கலந்துகொள்வார். (138)

# நிர்வாகிகள்

(இளவாலை)

உரும்பராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க. அருந்தவராசா, உப தலைவர்: இ. ரகுநாதன், செயலாளர் சி கிருஷ்ணகுமார், உப செயலானர்: அ. சபேசன், பொருளாளர்: ச. குலசிங்கம் ஆறுபேர்கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (138)

# கீரிமலைக்கு திரளும் மக்கள்

(இளவாலை)

கீரிமலைக்கு நாள்தோறும் திரளான மக்கள் வருகின்றனர்.

போக்குவரத்து, குடிதண்ணீர், மலசலகூடம் மற்றும் வாகனங்களை நிறுத்திவைப்பதற்கு இடவசதிக் குறைபாடுகளினால் சிரமங்கள் ஏற்படுகின்றன. (138)


வெளிவந்துவிட்டது!

## விரைவாக கணிப்பது எப்படி?

## How to Calculate Quickly?

**By Nagaratnam B. Sc. (Cey.)**


நாட்டின் சகல பிரபல புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: பாலர் முதல் பட்டதாரிகள் வரை அனைவருக்கும் பயன்தரும் அற்புதப் படைப்பு! எந்தத் துறையிலும் ஈடுபட்டுள்ளவருக்கும் இலகுவாக கணப்பீடுசெய்ய உதவும் நூல்.

(எ-712)



## 11-வது ஆண்டு நினைவஞ்சலி



**மகேசன் வரதராஜன்**

தோற்றம்:- 21-04-1950

மறைவு:- 27-04-1979

பாசத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தவனே! தங்கள் பிரிவு எங்களால் என்றும் தாங்க முடியாதது ஒன்று. தங்கள் ஆத்மா ஈடேற்றமடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு மறவாத

மனைவி, மகள், சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள்.

லிங்க வாசா,
நவாலி.

(சி—3787)


# யாருடையது?

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு 2-ம் வட்டாரம் தைச்[illegible] இராஜேந்திரத் பாலசுப்பிரமணியம் என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்.

# கடற்றொழிலாளர் பிரச்சனை மே 3-ல் ஆராயப்படும்

(நாவற்குழி)

கடற்றொழிலை அபிவிருத்தி செய்யும் முகமாக 'கடற்றொழிலாளரின் பிரச்சனைகளும், எதிர்கால நடவடிக்கைகளும்' பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரும், கடற்றொழில் கூட்டுறவுத் திணைக்கள உயர்அதிகாரிகளும், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் மே மாதம் 3ந் திகதி வியாழக்கிழமை பகல் 2-00 மணிக்கு யாழ். மனோகரா படமாளிகையில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட மாதிரி நிர்வாகச் செயலகம் (கடற்றொழில் பகுதி) மேற்கொண்டுள்ளது.

இக்கலந்துரையாடல் நாளை 28ம் திகதி நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (107)

மணிவாக்கு

''அஹிம்சா யுத்தம் எப்போதும் ஓர் உடன்பாட்டி லேதான் முடியும். அதனால் எதிரிக்கு அவமான நிலையும் உண்டாகாது''.

—மநுதர்ம நீதி.

# நமது நோக்கு

## இஸ்லாமிய சகோதரர்கட்கு இனிய வாழ்த்துக்கள்!

"ஒப்பிலாச் சுதந்திரம் ஓங்கிடச்செய்திட
ஓய்வின்றி உழைத்தவரே
தப்பிதம் செய்தவர் தம்மைத் திருத்திய
தயாளர் முஹம்மதுவே!''

இஸ்லாமியச் சகோதரர்கட்கு இன்று பண்டிகை நாள்; மகிழ்ச்சித் திருநாள்!

ரமழான் நோன்பு இஸ்லாத்தின் ஐம்பெருங் கடமைகளுள் நாலாம் இடத்தை வகிக்கின்றது. இது ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் விதியாக்கப்பட்டது.

இஸ்லாமிய நம்பிக்கைகளும், கிரியைகளும் மனிதனின் உள்ளத்தையும், உடலையும், சிந்தனையையும் பக்குவப்படுத்துவதற்கு அமைந்தன; இவ்வுலகிலும், மறு உலகிலும் இன்பகரமான வாழ்விற்குப் பயிற்சி கொடுக்கும் திட்டங்களாக உதவுகின்றன.

ரமழான் பிறை தென்பட்டதிலிருந்து ஷவ்வால் பிறை தெரியும்வரை ஒரு மாதகாலம் நோன்பு நோற்றிருக்கிறார்கள்.

இப்புனித மாதத்தில் அவர்கள் செய்ததென்ன? புனித ரமழானின் பிறை தெரிந்ததுமே இறைவன் கட்டளைப்படி கிழக்கு வெளுப்பிலிருந்து சூரிய அஸ்தமனம்வரை உண்பதையோ குடிப்பதையோ விலக்கியிருக்கிறார்கள்.

''நோன்பு எனக்காகச் செய்யப்படும் வணக்கம்; அதற்கு நானே கூலி கொடுப்பேன்!'' என அல்லாஹ் அல்குர்ஆனில் உரைத்திருக்கிறார்.

தியானம், பிரார்த்தனை, பாராயணம் ஆகியவைகளே புனித மாதத்தின் பிரதான வேலைகளாகின்றன.

இஸ்லாம் கற்றுக்கொடுத்த முறைகளை 1410ஆண்டுகளுக்கு மேலாக இம்மியளவும் மாறுபடாது இஸ்லாமியர் நடந்துவருகிறார்கள்.

நோன்பு நோற்பவர்கள் பசித்திருக்கும் வேளை அதிகமானமையால் உடலுறுப்புகளில் பலவிதமான மாற்றங்கள் ஏற்படுகின்றன.

இதனால் இரத்த அமுக்கம், இருதயக் கோளாறு, குடல், இரைப்பை நோய்கள் போன்ற இன்னோரன்ன நோய்கள் குணமாவதாக மருத்துவர்களே ஏற்றுக் கொள்கிறார்கள்.

தீய கருமங்களை முற்றாகத் தடுப்பதும் நோன்பின் ஒரு நோக்கமாகும்.

ஏழை எளியோர்மீது அனுதாபம், அன்புகொள்ள வேண்டிய உணர்வை நோன்பு ஏற்படுத்துகின்றது; இதனால் அவர்களுக்கு இரங்கி உதவிபுரிகின்றனர்.

மக்களிடையே நல்லுறவையும், அனைவரும் ஒரே சகோதரர்கள் என்ற எண்ணத்தையும் நோன்பு ஏற்படுத்துகின்றது.

இலங்கையில் மதத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுகிஇருப்போர் தமிழ்பேசும் மக்கள். குறிப்பாகக் கிழக்கிலே ஆண்டாண்டு காலமாக நல்லுறவோடு வாழ்ந்துவருகிறார்கள்.

எனவே, இப்புனித நாளிலே நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, நல்லுறவும், பரஸ்பர நம்பிக்கையும் மேலும் வளரப் பிரார்த்திக்கிறோம்!

## சமயத்தை விளங்க வேண்டாமா?

கோணேசுவரத்திற்குத் தென் கயிலாயம் எனப் பெயர் வந்ததேன்?

முன்னொரு காலத்திலே வாயுபகவானுக்கும் ஆதிசேடனுக்குமிடையே யார் வலியவர் என்ற வாக்குவாதம ஏற்பட்டது. ஆதிசேடன் தனது ஆயிரம் தலைகளையும் அகலவிரித்து மகாமேரு மலையை மறைத்து நின்றார். வாயுபகவான் தனது பலத்தினால் மகாமேருவின் சிகரங்களுள் மூன்றைப் பெயர்த்தெறிந்தார். அவை திருக்காளத்தியிலும், திருச்சிராப்பள்ளியிலும், திருகோணமலையிலும் வீழ்ந்தன. ஆகவே இம்மூன்று திருத்தலங்களும் தென் கயிலாயங்கள் எனப் போற்றப்படுகின்றன. இந்திரன் முதலான தேவர்களும், திருமூலர் முதலான முனிவர்களும், இராவணன் முதலான மன்னரும் கோணேஸ்வரரை வணங்கி அருள்பெற்றனர்.

— கலையரசி

# "போராட்ட வடிவம் மாறலாம் கொள்கை ஒன்றுதான்" - அப்பன்

(நாவற்குழி)

''எமது தலைவரின் அரசியல் தந்திரத்தினாலும், உறுதியான மனப்பான்மையினாலும் இந்திய ஆக்கிரமிப்புப் படையை விரட்டியடித்தோம். எமது மண் நசுக்கப்படும்போதும், உரிமைகள் பறிக்கப்படும் போதும் நிலைமையைத் தாமாகவே உணர்ந்த பல இளைஞர்கள் எமது இயக்கத்தில் வந்து சேர்ந்தனர். எமது முழு உரிமைகளும் கிடைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம். எமது போராட்டங்தின் வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது கொள்கை கடைசிவரையும் ஒன்றாகவே இருக்கும்.''

இவ்வாறு கைதடி கிழக்கு கடற்கரை மைதானத்தில் கைதடி கிழக்கு இந்து இளைஞர் கழகத்தினால் நடத்தப்பட்ட வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கைதடி – நாவற்குழிப்பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. அப்பன் தெரிவித்தார்.

இவ்விழாவில் திரு. அப்பன் தொடர்ந்து பேசுகையில்; ''இலங்கை அரசாங்கம் எமது பேச்சுவார்த்தையைச் சரிவரப் பயன்படுத்தத் தவறி எம்முமுடன் போராட்டத்தில் ஈடுபட்டால் நாமும் இலங்கை

(7ம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் மீண்டும் சந்திப்பு

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையிலான அடுத்த கட்டப் பேச்சுக்கள் ஓரிரு தினங்களில் நடைபெறலாமென கொழும்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இதனை விடுதலைப் புலிகள் ஊர்ஜிதப் படுத்தவில்லை.

இம்முறை பேச்சுக்களின் போது மாகாணசபை கலைப்பும், புதிய தேர்தல்கள்பற்றியும் முக்கியமாக ஆராயப்படுமென்றும் தெரியவருகிறது. இதுகுறித்துத் தற்போது அரசு தரப்பில் ஆராயப்பட்டுவருகிறது.

இதேவேளை மாகாணசபை கலைப்பது குறித்து எழுந்துள்ள சட்டப்பிரச்சனைபற்றி சட்ட மா அதிபர் திரு. சுனில் டி சில்வா தலைமையிலான குழுவொன்று ஆராய்ந்து வருகின்றது. (சி)

## 'ஜெய்ப்பூர்' வளர்ச்சிக்காக 'சித்திரையில் ஒரு மாலை': இன்று இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை நிதிக்காக, இன்று வெள்ளிக்கிழமை மாலை சுண்டுக்குளி பரியோவான் கல்லூரி மண்டபத்தில் 'சித்திரையில் ஒரு மாலை' என்னும் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியை பிரபல நிகழ்ச்சித் தயாரிப்பாளரான ஜோ. எகட்டன் இலவசமாக தயாரித்து இயக்கவிருக்கிறார்.

## கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

அல்வாய் சாமணத்தறை ஆலடி விநாயகராலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன நாகதம்பிரான் ஆலய பிரதிட்டா கும்பாபிஷேகம் 28-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரம்மஸ்ரீ கைலைவாமதேவக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் ஆலய கும்பாபிஷேகத்தையடுத்து பக்த அடியார்களுக்கு சிவ தீட்சை வழங்கும் வைபவத்தையும் நடாத்த அல்வாய் மனோகரா மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பிரம்ம ஸ்ரீ கைலைவாம தேவக் குருக்கள் சிவ தீட்சை அடியார்களுக்கு வழங்குவார். (52)

## கங்கை அமரன் இசை நிகழ்ச்சி

(கொழும்பு)

தென்னிந்தியத் திரைப்படப் பாடகர்களின் இசை நிகழ்ச்சி ஒன்று மே மாதம் 2ந் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் திரு. எஸ். பி. பாலசுப்பிரமணியம், செல்வி சித்திரா ஆகியோர் பங்குபற்றுகிறார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு திரு. கங்கை அமரன் பின்னணி இசை வழங்குவார். இவர்களுடன் நடிகை ராதிகாவும், அவர் சகோதரி நிரோஷாவும் கலந்துகொள்கிறார்கள்.

ஜனாதிபதியின் தாபரிப்புப் பெற்றோர் திட்டத்திற்கு நிதி திரட்டுமுகமாக இந்நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இதற்கான அழைப்பை ஜனாதிபதி இவர்களுக்கு விடுத்துள்ளார். (சி)

## 2 கடற்றொழிலாளரைக் காணவில்லை!

(வடமராட்சி)

மருதங்கேணி கடற்பகுதியில் படகில் மீன்பிடிக்கச் சென்ற இரு இளம் கடற்றொழிலாளர்களை காணவில்லையென புகார் செய்யப்பட்டுள்ளது. எனினும் இவர்கள் எடுத்துச் சென்ற மீன்பிடி உபகரணங்கள் கடலுக்கடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 20-ம் திகதி சனிக்கிழமை மருதங்கேணிக் கடலில் மீன்பிடிகக் கறுவல் தம்பி றஞ்சன் (வயது 28) கறுவல்தம்பிநேசன் (வயது20) ஆகிய சகோதரர் இருவரையும் காணாததால் குடும்பத்தவர் பெரும் கவலை கொண்டுள்ளனர். இதையடுத்து சுளியோடிகளின் உதவியுடன் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது நாகர் கோவில் கடற்பகுதியில் அவர்களின் மீன்பிடி உபகரணங்கள் கடலுள் இருந்து மீட்கப்பட்டன.

இவர்கள் காணாமல்போனது பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளிடம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் குடும்பத்தவர் தெரிவித்தனர். (51)

## ஆத்மஜோதி வெளியீடு

[கிளிநொச்சி நிருபர்]

'ஆம்மஜோதி' சஞ்சிகையின் அறிமுக வெளியீட்டு விழா பரந்தன் மகா வித்தியாலயத்தில் குருகுல இயக்குநர் சபைத் தலைவரும், உதவி அரசாங்க அதிபருமான திரு. க. துரைராசா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

கண்டாவளைப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் சதா தனபாலசிங்கம், சைவப் புலவர் க. குமாரசாமி, உருத்திரபுரம் கொத்தணி அதிபர் ம. பத்மநாதன், புலவர் கந்தசாமி, கண்டாவளை கவிராயர் ஆகியோர் ஆசியுரை வழங்கிச் சிறப்பித்தனர்.

நூலாசிரியர் 'ஆத்மஜோதி' முத்தையா பதிலுரையாற்றினார். வர்த்தகப் பிரமுகர்களும், சமூக சேவையாளர்களும் நூலின் பிரதிகளைப் பெற்றுச் சிறப்பித்தனர்.

தலைமையுரையாற்றிய உதவி அரசாங்க அதிபர் துரைராசா, 'ஆத்மஜோதி' நூல் தமிழ் மக்களும் சைவமக்களும் படித்துப் பயன்பெறவேண்டிய அறிவுக் களஞ்சியமாகும்என்று குறிப்பிட்டார். (83)

# பலதும் பத்தும்

## வேய்ங்குழல் எங்கே?

ஜெயம் ஒரு போராளி; மட்டக்களப்பிலே, அமிர்தகழி தந்த ஒரு விடுதலை விரும்பி.

விடுதலை வேட்கையோடு கலையார்வமும் அவன் குருதியோடு கலந்துவிட்டன.

புல்லாங்குழற் பயிற்சியாளர் பலரைக் கவர்ந்த கலைஞன்; இளம் வயதிலேயே நாடக மேடைகளில் இலட்சியக் கருத்துக்களைப் பரப்பியவன்.

சிறைவாசம்... சித்திரவதைகள்... எனினும் அவனின் கலையார்வம் எள்ளளவும் குறையவில்லை.

அடர்ந்த காடுகளில் —முகாம்களில் —இவன் கரந்துறைந்திருக்கின்றான்; கூட இருந்த தோழர்களை உற்சாகப்படுத்தியிருக்கிறான் தனது வேய்ங்குழல் நாதத்தால்

அவன் கலையைப் பிறர் தொடர்ந்து சுவைக்க காலதேவன் விடவில்லை.

சுற்றி வளைக்கப்பட்டபோது...? தன்னுயிரையே போக்கி வீரமரணம் அடைந்துவிட்டான்!

புதைகுழியில் அவன் வைக்கப்படுகிறான், வேய்ங்குழல் எங்கே?

பலரை மெய்சிலிர்க்க வைத்த அந்த வேய்ங்குழலும்... அவன் மேனியருகே வைக்கப்பட்டது.

கலங்காதவர்களும் கலங்கினார்கள்; கலைத்தாயும் கண்ணீர் விட்டாள்!

வாணி

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்

**நமழான் வாழ்த்துக்கள்**

☾★

**நாகூர் மீரான்ஸ்**

154, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது

**நோன்பு பெருநாள் வாழ்த்துக்கள்!**

**ஜெஸீமா**
**பிக்சர் பலெஸ்**

222, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

நமழான் வாழ்த்துக்கள்!
தையல் உலகின் முன்னோடிகள்

**ஆப்தீன்**

5, ஜும்மா பள்ளிவாசல் லேன்
பெரியகடை, யாழ்ப்பாணம்.
கிளை: 108/3 நாவலர் வீதி
(ஐந்து சந்தி அருகாமை)
யாழ்ப்பாணம்

நமழான் வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கிறோம்!
அழகிய பவுண் நகைகள்
தங்கப்பவுண் வைரங்கள்

**கே. என். எம்.**
**மீறுன் சாஹிப்**

தங்கப்பவுண் நகை மாளிகை.
நகை வைர வியாபாரம்.
51, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 22585

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது நமழான் வாழ்த்துக்கள்!

தரமான சேட்டிங், சூட்டிங்
ரைடர் கிப்ஸ் பெனியன்கள்
அப்பில் ஜட்டிகள்
சிறுவர் சிறுமியர்களுக்கேற்ற
ரெடிமேட் நாகரிக ரை (TIE)

என்பவற்றை

உங்கள் எண்ணம்போல் தெரிவுசெய்ய

**SIYANAS**

**சியானஸ்**

கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம். **77** Kastu.iar Road, Jaffna.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
**ஈதுல் பித்ர் நல்வாழ்த்துக்கள்!**

கொழும்பு - யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம் - கொழும்பு
லொறிப் போக்குவரத்துச் சேவையுடன்

சகலவிதமான
★ கண்ணடி வகைகள்
★ (F) போமிக்கா சீற் வகைகள்
★ சிப்போட் வகைகளின்

மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்

**கிளாஸ் ஹவுஸ்**

182, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
ஈதுல் பித்ர் நல்வாழ்த்துக்கள்

**NIFTHY MOTORS**
**IMPORTERS & MERCHANTS**

Dealers in Isuzu, Leyland Benz
& B M C Lorry Spare Parts
Cycles, Cycle Spare Parts & Wall Clocks

**நிப்தி மோட்டர்ஸ்**

150, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

# பரக்கத்

இந்த ரமழானின் மா
ஒரு பரக்கத்தான மா
ஆகும். இந்த ரமழானி
மாதத்தில் ஸல்லதுல் க
என்ற சிறப்பான மாத
அடங்குகின்றது. இந்தலைல்

## வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் பு
பள்ளிவாசல் ஹ
மௌலவி எம். எ
மஹ்ரூப் விடுத்துள்ள ஆ
செய்தி.

''ஈழ நாடு'' இன,
பேதமின்றி எமது மக்க
அனைவரது உள்ளத்தை
கொள்ளை கொண்ட ஏடு.
யாழ்ப்பாணத்திலிருந்
வெளிவரும் மூத்த ஏ
'ஈழநாடு' ரமழான் சிற
மலர் வெளியிடும் முய
யைப் பெரிதும் பாராட்டுகி
றேன்.

''ஈதுல்பித்ர் பெருநாளன்
எமது மக்கள் அனைவரு
அதன் பொருளுணர்ந்து வ
எனது வாழ்த்துக்கள்.
மாத ரமழான் நோன்பு த
பயிற்சி வாழ்நாள் முழுவ
தொடரட்டும். மாதம் மு
வதும் இரவில் விழித்திரு
தொழுத பழக்கம் நிரந்
வழக்கமாகவே மாறட்டு
இம்மாதத்தில் வாரி வழங்
கரங்கள் வழங்கிக் கொண்
இருக்கட்டும். இஸ்லா
போதிக்கும் சகோதரத்து
தைக் கைக்கொண்டு ச
மக்களும் சமாதானமாக
சாந்தியுடனும் வாழ
வாழ்த்துக்கள்!''

வாடிக்கையாளர்கள்,
அனைவ
நோன்பு பெரு
DHEENSONS
66, மானிப்பாய் வீ

வாடிக்கையாள
எமது நமழா

**AME**
**Tai**
73, Grand
அமீர்
ரெ
73, பெரியக
தொலை

# ...ான மாதமே றமழான்மாதம்

...துல் கத்ர் என்னும் மாதத்
...திலேதான் குர்ஆன் இறங்கி
...பது. இந்த லைலதுல் கத்ரில்
...நாம் நோன்பு நோர்ப்பதிலும்
...நல் அமல்களைச் செய்வதி
...லும் ஈடுபடுதல் வேண்டும்.
இந்த ரமழானின் மாதத்தில்
அடங்கிய லைலதுல் கத்ர் என்
...னும் மாதம் ஆயிரம் மாதங்
...களை விடச்சிறந்தது. இந்த
ரமழான் மாதத்தில் பொய்,
பொருமை, கோபம் அனைத்
...தையும் பெருமையாக்கிக்
கொள்ளுதல் வேண்டும்.
இதற்கு உதாரணமாக ஒரு
ஹதீசும் இருக்கின்றது,

இரத்தமும் கலந்து வந்தது. இதைக்கண்ட ஸஹாபாக்கள் வியந்தார்கள். உடன் நபி (ஸல்) அவர்கள் கூறியதாவது; இவர்கள் மக்களைப் பற்றிப் புறம்பேசி இருக்கிருர்கள் என்ருர். ஆகவே மக்கள் நோன்புடன் புறம், பொய் சொல்வதைக்குறையுங்கள். இந்தப் புறத்தில் ஈடுபடுபவர்கள் கூடுதலாக பெண்கள்தான்.

இந்த ரமழானின் மாதத்தில் தீய விஷயங்களில் ஈடுபடுகிருர்கள். அதாவது புறம்பேசுவதில் ஈடுபடுகிருர்கள். எவர் ஒரு தீமை

இருப்பவர்தான் நோன்பு என சொல்லிவிட வேண்டும். எவர் ஒருவர் தன்வீட்டில் ஒரு நோன்பாளி நோன்பு திறக்க விடுகிருரோ அவருக்கு நன்மை கிடைக்கும். இந்த ரமழான் மாதத்திலும் சரி. மற்ற மாதத்திலும் சரி எவர் தஹஜ்ஜது தொழுகை தொழுவாராளுல் அவர் சிருதல் முஸ்தகீம் பாலத்தை எளிதில் கடப்பார். எவர் முப்பது நோன்பிலும் முப்பது துர்ஸ் அல்குர்ஆனை முடித்தால் அவர் நன்மைக்குள்ளாவார். சிலர் ஒரு தவறை செய்துவிட்டு

# ...புனித றமழான் சிறப்பிதழ்

இரு பெண்கள் நோன்பு
நோற்ருர்கள். பின் அவர்கள்
வயிற்று வலியால் துடித்தார்
...கள். இதைக் கண்ட ஸஹா
...பாக்கள் முஹம்மது நபி(ஸல்)
அவர்களிடம் வந்து யாரஸூ
...லல்லாஹ் இரு பெண்மணிகள்
நோன்பு நோற்ருர்கள். பின்
அவர்கள் வயிற்றுவலியால்
இப்பொழுது துடித்துக்
கொண்டு இருக்கிருர்கள்.
இதற்கு என்ன செய்யலாம்
எனக் கேட்டார்கள். அவர்
...களை இங்கு கூட்டிவாருங்கள்
என்று கூறிஞர்கள். பின் அவர்
...கள் அங்கு வந்ததும் அவர்க
...ளிடம் ஒரு வட்டியைக்
கொடுத்து அதில் வாந்தி எடுக்
...குமாறு சொன்ஞர்கள். அவர்
...கள் எடுத்தவுடன் அதில்
இறைச்சித் துண்டும் புதிய

யில் ஈடுபடுகிருரோ அவர் நரகத்தின் தலைவாசலுக்கு வந்துவிட்டார். எவர் ஒரு நன்மை செய்கிருரோ அவர் சுவர்க்கத்தின் வாசலுக்கு வந்துவிட்டார். இந்த ரமழான் மாதத்தை எவர் ஒருவர் நிறைவேற்றுகிருரோ அவர் சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டவர். சிலர் பர்ளை நிறைவேற்றுவார் சுண்ணத்தை நிறைவேற்றமாட்டார். இப்படிச் செய்தல் கூடாது. சுண்ணத்திலும் ஈடு

மனம் வருந்தக்கூடும். இவர் அழகான முறையில் உழுவெடுத்து அத்தஹிய்யாத் இறுப்பில் இருந்து தப்பாவை கேக்க வேண்டும். எந்த நேரத்திலும் இதைக் கேட்டால் ஏற்றுக் கொள்ளப்படும். இதை லைலத்துல் கத்ர் இரவில் ஓதிஞல் மிகவும் சிறப்பாகும். சிலர் சில தொழுகைகளை கலாச்செய்கினறனர். காரணம் (தூக்கத்திலேயோ வேறு எதிலாவது ஈடுபட்டு) இந்த ஹலவை அல்லாஹ் எதிர்க்கி

## முகம்மது சுல்தான் றிஸ்வாஞ

படுதல் வேண்டும். இந்த ரமழானின் இப்புதிய மாதத்தை அதாவது பொன்ஞன லைலத்துல் கத்ர் நேரத்தை வீணுக்கக்கூடாது. எவன் நோன்பை பிடிக்காமல் நோன்பாளிகளுக்கு உணவளிக்கிருனே அவன் நோன்பு பிடிப்பதற்குச் சமஞவான். நோன்பு பிடிக்காத சிலர் நோன்பாளிக்கு கரைச்சல் கொடுப்பார். அப்படிக் கரைச்சல் கொடுக்கக்கூடாது. ஏதும் பிரச்சனை நடந்தால் அடிக்கடி வருவது நிச்சயம் குடும்பப் பிரச்சனை. அப்பொழுது நோன்பாளியாய்

ருன். முக்கியமான நேரத்தில் நிறைவேற்ருவிட்டால் பரவாயில்லை. இந்த ரமழான் மாதத்தில் இஷாவின்பின் தொழுகை இருக்கிறத இதற்கு தருவீஹ் எனப்படும். இது ரமழான் மாதத்தில் மட்டுமே உண்டு. இந்த மாதத்தில் உலோபித்தனம், பொய் இவை இரண்டும் ஒரு முஸ்லிமுக்கு வெகு தூரத்தில உள்ளவை என நபி (ஸல்) கூறுகிருர். சிலர் இஷா தொழுகையையும் தருவீஹ் தொழுகையையும் உபகாரத்திற்குப் பகரமாக தொழுது

(7-ம் பக்கம் பார்க்க)

வாடிக்கையாளர் அனைவருக்கும்
றமழான் வாழ்த்துக்கள்!

தரமான அப்பியாசக் கொப்பி வகைகள்
அச்சகப் பேப்பர் வகைகள்
பாடசாலை உபகரணங்கள்
யாவும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

கந்தையா சேல்ஸ் சென்ரர்
இல. 21 (157), கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

வாடிக்கையாளர்கள்
அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது றமழான் வாழ்த்துக்கள்!

பாடசாலை உபகரணங்கள்
காகிதாதிகள்

மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்

ஹாஜி அப்பாஸ் சன்
6, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

...பர்கள், ஆதரவாளர்கள்
...கும் எமது
...ர் வாழ்த்துக்கள்!
...ன்சன்ஸ்
...நம்புப் பொருட்கள்
...ட்டிப் பொருட்கள்
வியாபாரிகள்
யாழ்ப்பாணம்.

என்றென்றும் எங்கள் சுவை ரசித்த
வாடிக்கையாளர்களே! நண்பர்களே!!
அனைவருக்கும் எமது
ஓரியன்ட் உளம் கனிந்த
ஈதுல்பித்ர் வாழ்த்துக்கள்!

வாய்க்கு ருசியான மணம் காரத்துடன்

★ கட்லட் ★ கோழி புரியாணி
★ பெட்டீஸ் ★ ஆட்டிறைச்சிப் புரியாணி
★ ரோல்ஸ் ★ மாட்டிறைச்சிப்புரியாணி
★ கேக்வகைகள் ★ வட்டலாப்பம்
★ கொத்துரொட்டி ★ முட்டைரொட்டி
★ கோழி ரோஸ் ★ குளிர் பானங்கள்

சுவைத்து மகிழ

ஹோட்டல்
ஓரியன்ட்

குறிப்பு: விஷேச ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

உங்களது திருப்தியே எங்களின் மனநிறைவு

ஹோட்டல் ஓரியன்ட்
நாவலர் வீதி, இந்து சந்தி, யாழ்ப்பாணம்.

...ன அனைவருக்கும்
...வாழ்த்துக்கள்!

...R TEX
...ring
...zaar, Jaffna.
...ரெக்ஸ்
...றிங்
யாழ்ப்பாணம்.
: 23021

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
புனித றமழான் வாழ்த்துக்கள்
தரமான தங்கப்பவுண்
நகைகளுக்கு

★

VOGUE
Jewellers
வோக் ஜுவல்லர்ஸ்
JEWELLERS, GEM & DIAMOND MERCHANTS
213D, கஸ்தூரியார் வீதி, 213 D, Kasthuriar Road.
யாழ்ப்பாணம்.

## ★ இந்திய - பாகிஸ்தான்

# யுத்தத்தை தவிர்க்க இணக்கம்;

# நியூயோர்க் மாநாட்டில் முடிவு!

## படை நடவடிக்கைக்கும் கட்டுப்பாடு

(நியூயோர்க்)

காஷ்மீர் விவகாரம் தொடர்பாக இந்தியா-பாகிஸ்தானிடையே எழுந்துள்ள முறுகலை தவிர்த்து மோதல்கள் உருவாகாது தடுக்க இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் மாலை இது தொடர்பான முக்கிய சந்திப்பு நியூயோர்க்கில் நடைபெற்றபோதே இவ்வாறு இணக்கம் காணப்பட்டது.

இச்சந்திப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால் தலைமையிலான குழுவும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஜனுப் ஸகாப் சாதா யாகூப்கான் தலைமையிலான குழுவும் பேச்சுக்கள் நடாத்தின.

சுமார் இரு மணி நேரம் இடம்பெற்ற பேச்சுக்களின்போது இருதரப்பும் தமது கோரிக்கைகளை முன்வைத்ததாகவும் எனினும் தற்போதைய நிலையில் யுத்தம் ஒன்று நிகழ்வதை உடனடியாக தவிர்க்க இரு நாடுகளும் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து யுத்த தவிர்ப்பிற்கும் எல்லைப்புறங்களில் படை நடவடிக்கைகள் கட்டுப்படுத்தவும், சரியான தொடர்புகளை ஏற்படுத்தவும், ஆத்திரமூட்டும் விதத்திலான பேச்சுக்களைத் தவிர்க்கவும் இரு அமைச்சர்களும் இணக்கம் தெரிவித்தனர்.

இதையடுத்து இரு அமைச்சர்களும் விடுத்த கூட்டறிக்கை ஒன்றிலேயே மேற்படி இணக்கம்பற்றிய விபரங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. மேலதிக யோசனைகள் குறித்தும் சுமுகநிலையைப் பேணவும் தொடர்ந்து பல சந்திப்புகள் ஏற்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்தியா - பாகிஸ்தான் முறுகலுக்கு காரணமாயிருக்கும் காஷ்மீர் நிலைகுறித்து இருதரப்பும் ஆராய்ந்தன. அங்கு தீவிரவாத நடவடிக்கைகளை நிறுத்தி உடனடியாக அமைதியை ஏற்படுத்த பாகிஸ்தான் உதவ வேண்டுமென்றும் இந்தியத் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் அவர்களது விருப்பத்தையும் மதித்து இந்தியா சர்வஜன வாக்கெடுப்பை நடாத்த வேண்டுமென்றும் பாகிஸ்தான் தரப்பில் கோரப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### பாகிஸ்தானுக்கு 'மிராஜ்' விற்பனை:

## இந்தியா கடும் ஆட்சேபம்

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கு 50 மிராஜ் போர் விமானங்களை ஆஸ்திரேலியா வழங்கவுள்ளதை இந்தியா வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் தனது பலத்த ஆட்சேபத்தையும் ஆஸ்திரேலிவிற்கு மதெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் பாகிஸ்தானுக்கு 50 மிராஜ் விமானங்கள் வழங்குவது இருதரப்பிடையேயும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமென்றும் இப்பிராந்தியத்தில் யுத்த சூழ்நிலை ஒன்றை உருவாக்க கட்டியமான முயற்சிகளை ஆஸ்திரேலியா மேற்கொள்வதாகவும் கருதவேண்டியிருக்கிறதென்றும் இந்தியா தெரிவித்துள்ளது.

மேற்படி விமான விற்பனை குறித்து கடந்த வருடமே இணக்கம் காணப்பட்டதாகவும் அதனை அனுப்பும் சந்தர்ப்பம் இப்போதுதான் கிடைத்திருப்பதாகவும் ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் ஆராய்ந்து தமது முடிவை வெளியிட ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சகம் இணங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் விமானக் கொள்வனவை உடனடியாக மேற்கொள்ளவே பாகிஸ்தான் விரும்புவதாகவும் கூறப்படுகிறது. (சி)

### ஜெருசலம் இஸ்ரேலின் தலைநகர்

### அறிவிப்பை வாபஸ் பெறுவிடின்

## அமெரிக்கர் கொல்லப்படுவர்

### தீவிரவாதிகள் எச்சரிக்கை

(பெய்ரூட்)

இஸ்ரேல் தொடர்பாக அமெரிக்கா விடுத்த அறிவிப்பை அது வாபஸ் பெறுத பட்சத்தில் முஸ்லிம் நாடுகளிலுள்ள சகல அமெரிக்கர்களையும்கொல்லப்போவதாகபலஸ்தீனத்தில் இயங்கிவரும் தீவிரவாத குழு ஒன்று கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜெருசலமே, இஸ்ரேலின் தலைநகரமென அண்மையில் அமெரிக்கா அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தது. இந்த அறிவிப்பு பலஸ்தீனியர்களிடையேயும் முஸ்லிம் நாடுகளிடையேயும் பெரும் கொந்தளிப்பு நிலையை தோற்றியுள்ளதுடன் அமெரிக்காவின் இச்செயலை அவை வன்மையாகவும் கண்டித்துள்ளன.

இது குறித்தே பலஸ்தீன தீவிரவாத குழுவான 'இஸ்லாமிக்ஜிகாத் - பிற் - அல்மக்டிஸ்' என்னும் அமைப்பு விடுத்த எச்சரிக்கையின்போதே அமெரிக்கா இந்த அறிவிப்பை அடுத்த பத்து நாட்களுக்குள் வாபஸ் பெறுவிடில் முஸ்லிம்நாடுகளிலுள்ள அமெரிக்கர்களை கொல்லப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

தற்போதைய சிக்கல் நிறைந்த சூழ்நிலையில் ஜெருசலமே இஸ்ரேலின் தலைநகரென அமெரிக்கா விடுத்த அறிவிப்புநிலைமையை மேலும் மோசமடையச் செய்யுமென்றும் பல முஸ்லிம் நாடுகள் தெரிவித்துள்ளதுடன் இந்த அறிவிப்பிற்கு கண்டனமும் தெரிவித்துள்ளன. (சி)

### இந்தியாவில்

## கிளர்ச்சியை அடக்க

### புதிய 'பரா' இராணுவம்

(புதுடில்லி)

இந்தியாவில் கிளர்ச்சியாளர்களை எதிர்த்துப் போரிடவும், உள்நாட்டுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் புதிய பரா இராணுவப் படையொன்று அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கு 'தேசிய பயிற்சிப் படை' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

பாரதப் பிரதமர் திரு. வி. பி. சிங் இதுபற்றி நேற்று அறிவிப்பொன்றை வெளியிட்டார். இப்படையில் 75 சதவீதத்தினர் ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களாகவும், மிகுதியினர் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த 'தேசிய பயிற்சிப் படை' இவ்வருட இறுதிக்குள் அமைக்கப்படும் என்றும் இதற்கென துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## கதிர்வீச்சு ஏற்படலாம் கப்பலை வெளியேற்றுதீர்

### நோர்வே எச்சரிக்கை

(ஒஸ்லோ)

'ஆட்டிக்' சமுத்திரத்தில் கடந்த வருடம் மூழ்கிய சோவியத் அணுசக்தி நீர்மூழ்கிக்கப்பலை வெளியேற்றும் எந்த முயற்சியிலும் ஈடுபடவேண்டாமென நோர்வே கடும் எச்சரிக்கை செய்துள்ளது.

இவ்வாறு அதனை வெளிக்கொணர முயற்சிக்கும் எச்சந்தர்ப்பத்திலும் அது சேதமுறுப் பெரும் கதிர்வீச்சுத் தாக்கம் ஏற்படும் என்றும் இதனால் பெரும் பாதிப்புக்கள் ஏற்படலாமெனவும் நோர்வே வெளியுறவு அமைச்சகம் எச்

(7ம் பக்கம் பார்க்க)

### சிறுவர் பாடசாலை விபரம் சேகரிப்பு

(நாவற்குழி)

கைதடி நாவற்குழிப் பகுதியில் உள்ள சிறுவர் பாடசாலைகளின் விபரங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கைதடி நாவற்குழி பிரதேசக் கிளையினால் சேகரிக்கப்படுகின்றன.

இப்பகுதி சிறுவர்பாடசாலைகளுக்கான தேவைகளையும் உதவிகளையும் வழங்கும்முகமாகவே இவ்விபரங்கள் வடக்கு-கிழக்கு மாகாணம் முழுவதும் சேகரிக்கப்படுவதாக கைதடிநாவற்குழி பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. அப்பன் தெரிவித்தார். (107)

### திறந்த பல்கலைக்கழகம்

## உபவேந்தர் இன்று

### மாணவர்களைச் சந்திப்பார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் தயந்தா விஜயசேகரா பிராந்திய கல்விச் சேவைப் பணிப்பாளர் திரு. எல். பி. சமரக்கோன் ஆகியோர் நாளை சனிக்கிழமை காலை யாழ். பிராந்திய நிலையத்தில் மாணவர்களைச் சந்தித்து அவர்களது பிரச்சனைகளைப்பற்றி கண்டறிவார்கள். (8-ம்பக்கம் பார்க்க)

### முதல் ஆட்டத்தில்

## இந்திய அணி தோல்வி

### இன்று பாகிஸ்தானைச் சந்திக்கிறது

(ஷார்ஜா)

ஷார்ஜாவில் நடைபெறும் 'ஒஸ்ரலேஷியா' கிண்ண சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் முதல் ஆட்டத்தில் இலங்கை அணி இந்தியாவை தோற்கடித்துள்ளது.

முதலில் ஆடிய இந்தியஅணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 241 ஓட்டங்களை பெற்றது. அஸாருதீன் 108 ஓட்டங்களையும் சிது 65 ஓட்டங்களையும் பெற்றனர். அடுத்து ஆடிய இலங்கை அணி 49.2 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 242 ஓட்டங்களை பெற்றது. இதில் அர்சுண ரணதுங்க ஆட்டமிழக்காமல் 85 ஓட்டங்களை பெற்றார்.

(7ம் பக்கம் பார்க்க)

# இலங்கை வங்கியின் பருத்தி-நெல்லி கிளைகளில் 1000 ரூபா கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையிலும், நெல்லியடிக் கிளையிலும் இன்று 27, நாளை 28, ஞாயிறு 29ம் திகதிகளில் கீழ்க்குறிப்பிட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கு 1000 ரூபா நிவாரணம் வழங்கப்படஉள்ளது.

வல்வெட்டித்துறை தெற்கு, வடக்கு, தொண்டைமானாறு, பொலிகண்டி கிழக்கு, மேற்கு, கெருடாவில் தெற்கு, வடக்கு, அல்வாய் வடக்கு, மேற்கு ஆகிய கிராமங்களுக்கு இன்றும், வியாபாரிமூலை, பருத்தித்துறை, பருத்தித்துறை கிழக்கு, புலோலி கிழக்கு, தெற்கு, மேற்கு, தும்பளை ஆகிய கிராமங்களுக்கு நாளை 28ம் திகதியும் பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் நிவாரணம் வழங்கப்படும்.

கரணவாய் வடக்கு, தெற்கு, மேற்கு, கரவெட்டி மத்தி ஆகிய கிராமங்களுக்கு நாளை 28ம் திகதி நெல்லியடிக் கிளையிலும் மந்திகை, வல்லிபுரம், அம்பன், குடத்தனை, கரையூர், கற்கோவளம், சுண்டிக்குளம், நாகர்கோவில் தெற்கு, வடக்கு துன்னாலை வடக்கு ஆகிய கிராமங்களுக்கு 29ம் திகதி பருத்தித்துறைக் கிளையிலும் 1000 ரூபா நிவாரணம் வழங்கப்படும்.

வல்வெட்டி, கரவெட்டி மேற்கு, வடக்கு, கிழக்கு, மத்தி ஆகிய கிராமங்களுக்கு 29ம் திகதி நெல்லியடிக் கிளையிலும் நிவாரணம் வழங்கப்படும்.

## போராட்ட

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்திற்கு எதிராகப் போராடத் தயங்கமாட்டோம்.

இன்று நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டியைப் போல் எல்லா இடங்களிலும் போட்டிகள் நடாத்தப்பட்டு, இளைஞர்களும், யுவதிகளும் சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் காணப்படவேண்டும். உடல்வலிமையைப்பேண விளையாட்டு அவசியமாகும்'' என்றார். (107)

# இடிந்துவிழும் நிலையில் சங்கக் கட்டிடம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒன்பதாம் இலக்க பண்டத்தரிப்புக் கிளைக்குச் சொந்தமான கட்டிடம் இடிந்து விழும் அவலநிலையில் காணப்படுகின்றது.

பண்டத்தரிப்பு பிரதான வீதியில் உள்ள இக் கிளைக் கட்டிடம் தகுந்த முறையில் பராமரிக்கப் படாத நிலையில் கடந்த பல வருடங்களாகக் கவனிப்பாரற்று இருக்கிறது. சங்கத்தின் சொத்து இவ்வாறு சீரழிவதைத் தடுக்க சங்க நிர்வாகிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. (72)

# இப்படியும் நடக்கிறது

திருகோணமலையில் ஒரு விழா. விழாவில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். திரளாக மக்களும் வந்திருந்தனர்.

சிறப்புப் பேச்சாளர் ஒருவரின் பெயர் அறிவிக்கப்பட்டு ''இவர் சொற்பெருக்காற்றுவார்'' என்று தெரிவிக்கப்பட்டது.

அப்பிரமுகர் 'மைக்' முன் வந்து ''பாரதியும் பாஞ்சாலியும்'' பொருள்பற்றி மிக உயர்ந்த கருத்துக்களுடன் 'விளாசி', சபையோரின் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டார்.

விழா முடிந்தது, சில முக்கியமானமானவர்கள் மத்தியில். ஆச்சரியத்துடன் கூடிய ஒரு சின்னச் சந்தேகம். ''சிங்களவராக இருந்தும் தமிழில் அற்புதமாகப் பேசிவிட்டார்'' —இதுதான் அந்தச் சந்தேகம்.

அந்தப் பேச்சாளர் யார் தெரியுமா? யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் திரு. டிவகலாலா.

பெயரை வைத்து ஒரு சிங்களவர் என்று முடிவு கட்டிவிட்டார்கள்.

அது சரி; இப் புதுமையான பெயர் எப்படிவந்தது? அவரே ஒரு கூட்டத்தில் இப்படிக் கூறியிருக்கிறார்.

''இது எனது அம்மா வைத்த பெயர்தான். என்னை வளர்த்து ஆளாக்குவதில் அம்மா கவனம் செலுத்தினாரே தவிர பிறந்த உடன் பெயர் வைப்பதில் அவர் அதிக அக்கறை காட்டவில்லை''

(தகவல்: ஓர் அன்பர்)

'ஊடுருவி'

## கதிர்வீச்சு

(6ம் பக்கத் தொடர்ச்சி)

சரித்துள்ளது.

நோர்வேயிலிருந்து புறப்பட்ட இந்த அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் விபத்தொன்றில் சிக்கி நீரில் மூழ்கியது எனினும் அணுசக்திப் பகுதி பாதிக்கப்படாததால் எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை. தற்போது இதனை வெளிக்கொணரும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதனைக் கண்டித்துள்ள நோர்வே வெளிக்கொணரும் முயற்சியில் ஏற்படும் தாக்கத்தால் அணுக்கதிர் வீச்சு ஏற்படலாமென்றும் இதனைக் கைவிடுமாறும் கோரியுள்ளது. (சி)

## முதல் ஆட்டத்தில்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இந்திய பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. பாகிஸ்தான் அணியில் இம்முறை சுகயீனம் காரணமாக யாவிட் மியான்டாட்டும், வாஸிம் அக்ரமும் கலந்து கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதேபோல் நியூஸிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரரர் ரிச்சர்ட் ஹாட்லியும் சுகயீனகாரணமாகஇத்தொடரில் கலந்து கொள்ளவில்லை.

### அதிக பணப்பரிசு

அதிக பணப்பரிசை கொண்ட இச்சுற்றுப் போட்டியில் முதலாமிடத்தை பெறும் அணி ஆறு லட்சம் அமெரிக்க டொலரை பெறும். 2-ம் இடத்தைபெறும் அணி 4 லட்சம் அமெரிக்க டொலரையும் 3-ம் இடத்தை பெறும் அணி 2 லட்சம் அமெரிக்க டொலரையும் பெறும். மேலும் சிறந்த நான்கு அணிகளுக்கு தலா ஒருலட்சம் டொலர் பணப்பரிசும் வழங்கப்படும்.

முன்னைநாள் தற்போதைய ஆறுவீரர்களுக்கும் தலா ஒரு லட்சம் டொலர் பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது இலங்கை வீரர் டுலீப் மென்டிசும் இதில் ஒருவர்.

### போட்டிகள் விபரம்

ஏப்ரல் 25: இலங்கை எதிர் இந்தியா. ஏப் 26: நியூஸிலாந்து எதிர் ஆஸ்திரேலியா: ஏப் 27; இந்தியா எதிர் பாகிஸ்தான், ஏப் 28: பங்களாதேஷ், எதிர் நியூஸிலாந்து, ஏப் 29 பாகிஸ்தான் எதிர் இலங்கை, ஏப் 30: பங்களாதேஷ் எதிர் ஆஸ்திரேலியா. மே 1: முதலாவது அரையிறுதி ஆட்டம், மே 2. இரண்டாவது அரையிறுதி ஆட்டம், மே 4: இறுதியாட்டம். (சி)

# வேகமாக அமையும் சிற்றூரவைகள்

(மட்டுவில்)

தென்மராட்சிப் பகுதியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் சிற்றூரவைகள் வேகமாக அமைக்கப்பட்டுவருகின்றன.

இந்தச் சிற்றூரவை அமைப்பு வேலைகள் தற்பொழுது சாவகச்சேரி, மீசாலை, மட்டுவில், சரசாலை, தென்மராட்சி கிழக்கு, தென்மராட்சிமேற்கு ஆகிய பகுதிகளில் பூர்த்தியாகி உள்ளன.

சிற்றூரவைகள் அமைப்பு வேலைகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியற் பொறுப்பாளர்களான திரு. கே. பாப்பா, திரு. கந்தன் ஆகியோர் மேற்கொண்டுவருகின்றனர். (82)

## மாற்றுவைத்தியமுறை ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

''மாற்று வைத்தியமுறை ஆணைக்குழுவில் ஹோமியோபதி வைத்தியத்துறை நலனையும், ஹோமியோபதி வைத்தியர்களின் நலனையும் கவனிப்பதற்கு வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் சார்பில் குறைந்த பட்சம் இரண்டு உறுப்பினர்களுக்காவது இடம் ஒதுக்கப்படவேண்டும்''. என்று வட இலங்கை ஹோமியோபதி சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக சங்கத் தலைவர் டாக்டர் அ. கிருஷ்ணசாமி, லங்கா ஆயுள்வேத வைத்தியக்கல்லூரி அதிபர் டாக்டர் மகேஸ்வரனுக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் ''வடகிழக்கு மாகாண சபையின் மாற்று வைத்தியமுறை ஆணையாளராக தாங்கள் நியமனம் பெற்றிருக்கும் செய்தி எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. புனிதமான பதவிக்கு தாங்கள் நியமனம் பெற்றமைக்கு எமது சங்கம் சார்பில் பாராட்டுதலையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்'' என்றும் தெரிவித்துள்ளார்.

## இராசி பலன்

27-04- 1990
வெள்ளிக்கிழமை

மேடம்: உற்சாகம், பணவரவு, தெய்வவழிபாடு, பிதாவழிச்சிந்தனை, புண்ணியச் செலவுகள்.

இடபம்: சுபச்செய்தி, உஷ்ணவியாதி, வேதாந்தம் பேசுதல், இடமாற்றங்கள்.

மிதுனம்: மடமைத்தனம், ஆலயதரிசனம், பிதாசிந்தனை, துயரச்செய்தி.

கடகம்: தொழிற் சிறப்பு, மறதி, மதியீனம், செலவு.

சிங்கம்: சுபகாரியச்செலவு, சாஸ்திர ஆராய்ச்சி, நிதானமின்மை, வீண் யோசனை.

கன்னி: பொருள்சேர்க்கை, பதவிமாற்றம், உறவினர் வருகை, செலவு

துலாம்: ஏமாற்றுதல், இனசனவரவு, பிறரால்வஞ்சிக்கப்படுதல், பணவரவு.

விருச்சிகம்: ஏக்கம், தெய்வவழிபாடு, கடினச் சொல், சுபச்செய்தி.

தனுசு: மதகபீடை, ஆலயத்திருப்பணி, வைத்தியச் செலவு, குடும்பநலம்.

மகரம்: அமைதியின்மை, வைத்தியம், அற்பர் நேசம், சாதுரியம்.

கும்பம்: வீண் யோசனை, அரசஉபாதை, தெய்வீகம், பொருள்சேருதல்.

மீனம்: உடையது விளம்பாமை, நண்பர் உதவி, தூரத்துச் செய்தி, செலவு.

இ. மகாதேவா

## வாசகர் வட்டக் கூட்டம்

(நாவற்குழி)

நாவற்குழி பொது நூலக வாசகர் வட்ட வருடாந்தப் பொதுக் கூட்டம் இம் மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நாவற்குழி பொது நூலக மண்டபத்தில் சாவகச்சேரிப் பிரதேசசபை நாவற்குழி உபபணிமனைப் பொறுப்பதிகாரி திரு ஏ. கே. தில்லை நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது இக்கூட்டத்தில் நூலக அபிவிருத்தி பற்றிய ஆலோசனைகளும், தீர்மானங்களும் எடுக்கப்பட்டு புதிய நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படுவர். (107)

## ஈரோஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருடாவருடம் வரும் மே மாதம் முதல் நாளாகிய 'மேதினம்' பற்றி பரவலாக உலகம் பூராவும் கொண்டாடப்பட்டோ அல்லது வீர நினைவு நாளாகவோ அன்றி எதிர்கால விடிவை நோக்கிய நாளாகவோ நினைவுகூரப்பட்டு வருகிறது இந்நாள், கேட்டுப் பயனில்லை - நாமாகவே பெற வேண்டியதுதான் என்ற நிலைக்கு வந்த சர்வதேச தொழிலாளர் வர்க்கம் 1847ல் இருந்து 8 மணித்தியால சட்டப்படி வேலை 'கோரிக்கையை முன்வைத்து 1886 மே 1-ம், நாள் சிக்காக்கோ நகரில் வரலாற்று திருப்பத்தை ஏற்படுத்திய நாளே, இரண்டாவது அகிலத்தின் பின் 1990 மே 1 முதலாவது சர்வதேச தொழிலாளர் தினமாக பிரகடனப் படுத்தப்பட்டது. ஒரு நூற்றாண்டு நிறைவை இன்று நாம் நினைவில் கொள்ளுகிறோம்.

இலங்கைத் தீவின் முக்கிய பாட்டாளி வர்க்கமான மலையகத் தோட்டத்தொழிலாளர்கள் முதலாளித்துவத்தின் பிரித்தாளும் தந்திரத்தினால் வர்க்க ஒற்றுமையை இழந்து இனவாத முத்திரை குத்தப்பட்டு தமது உரிமைகளை இழந்துள்ளார்கள். மலையக மக்களின் நியாயமான கோரிக்கைகளையும், உரிமைகளையும் வென்று கொடுப்பதற்கு சர்வதேச பாட்டாளி வர்க்கம் குரல்கொடுப்பதுடன் வடக்கு-கிழக்கு விவசாயத் தொழிலாளர்களும், மலையக மக்களுடன் கைகோர்த்து எழ வேண்டும். முதலாளித்துவத்தின் சதியான இனச்சகதியில் இருந்து மீண்டும் வர்க்க ஒற்றுமைக்காய் அறைகூவல் விடுகின்றோம்.

இலங்கைத்தீவின் தேசிய வருமானத்தில் வருடாவருடம் 600 கோடி ரூபா வருமானமாக உழைத்துக்கொடுப்பவர்கள் மலையக தொழிலாளர்களே இவர்களின் உழைப்பிலே இலங்கைத்தீவு வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இவர்களுக்கு இன்று நாள் சம்பளமோ அல்லது மாதச் சம்பளமோ வழங்கப்படுவதில்லை. நாள் சம்பளம் பொதுவாக நடைமுறையில் ஆகக் குறைந்தது 75/- வழக்கத்தில் இருந்து வருகிறது மாதச் சம்பளம் 2500/- வரை ஏனையோருக்கு வழங்கப்பட்டுவருகிறது. வாழ்க்கைச் செலவு அதிகரித்து வரும் இந்நிலையில் தோட்டத் தொழிலாளரின் சம்பளம் அதிகரிக்கப்படாததால் அவர்கள் வறுமையில் வாழ்ந்துவருகின்றார்கள். அவர்களது சம்பளம் மாதச்சம்பளமாக மாற்றப்பட்டுஅதிகரிக்கப்படவேண்டும்

இலங்கை அரசால் மலையகத்தில் 10 லட்சம் தொழிலாளரின் பிரஜா உரிமை பறிக்கப்பட்ட பிறகு 1964ல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தமும், 1974ல் சிறிமா-இந்திரா ஒப்பந்தமும் 1987ல் ஜே. ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் ஆகிய உடன்படிக்கைகளால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு இன்று உரிமை இழந்து, அரசியல் உரிமை மறுக்கப்பட்டு, அந்நியர்களாக கருதப்பட்டு நாடு கடத்தப்படவிருக்கும் அனைவருக்கும் பொதுப் பிரகடனம் மூலம் பிரஜா உரிமை வழங்கப்படவேண்டுமெனவும்,

மலையக மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தனியான தமிழ் அரசாங்க அதிபர் பிரிவும், தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவும், தனியான கிராமசேவகர் பிரிவும் கொண்டுவரவேண்டுமெனவும், இதன்மூலம் மலையக மக்கள் நேரடியாக அரசுடன் தொடர்புகொள்வதுடன் தேசிய அரசியலில் இணைந்து செயற்பட வாய்ப்பு ஏற்படும் என்பதால் தனியான தமிழ் நிர்வாகப் பிரிவுகள் ஏற்படுத்த வேண்டுமெனவும்;

மலையக மக்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவந்த மண்ணில் ஒரு துண்டு நிலம் தானும் வழங்கப்படாமல்மண்ணுக்கே சொந்தமில்லாதவர்களாக ஆக்கப்பட்டிருப்பதால் குடியிருக்கக் காணியும் இருப்பிட வசதியும் செய்துகொடுக்க வேண்டுமெனவும் அரசாங்கத்திடம் கோரிக்கையாக விடுக்கின்றோம்.

## பரக்கத்தான

(5ம் பக்கத் தொடர்ச்சி)

விடுகின்றனர். அதாவது சீக்கிரம் தூங்குவதற்காக நேரம் வருமுன் தொழுகிறார்கள். இவையெல்லாம் புனித ரம்ழான் மாதத்தில் சில மனிதர் இப்படிச் செய்துவிடும் நிலையாகும். இந்த ரமழான் மாதத்தில் நாம் இப்படி செய்தது அழகல்ல. எவராயினும் சரி அந்த நேரத் தொழுகையை அந்த நேரத்திலே தொழுது விடுதல் வேண்டும். ஒருபர்ளை நிறைவேற்றினால் மூன்று பர்ளுக்குச் சமனாகும். இனியாவது இந்தக்கடமைகளை உணர்ந்து நல்நன்மையைத் தேடுவீர்களாக ஆமீன்! யாறப்பவ் ஆலமீன் சுப்புஹுூத் தொழுகைக்கு(அதிகாலையில் எழுந்து) மஸ்ஜிதுப்பக்கம் செல்லும் உத்தமன் ஈமானுடையவனாவான். எவன் ஒருவன் கடைவேளையில் இருந்துவிட்டு தொழுகையை நிறைவேற்றாதவன் செய்த்தானாவான்.

வஸ்ஸலாம்.

# 6-வது திருத்தச்சட்டத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தினை நீடிப்பதற்கான விவாதத்தின்போது அண்மைக்காலங்களில் நாட்டில் எத்தனை கொலைகள், கொள்ளைகள், கடத்தல் சம்பவங்கள் நடைபெற்றன என்பதனை கணக்கிட்டு பேசப்பட்டு வந்ததே வழக்கமானதாய் இருந்தது. ஆனால் இன்றைய சூழலில் இதற்கு மாறாக, நாட்டில் இவை மிகவும் குறைந்துவிட்ட நிலையில் இவ் விவாதம் நடைபெறுவதனையிட்டு நாம் அனைவரும் மகிழ்ச்சி அடைய வேண்டும்.

1983-ம் ஆண்டிலிருந்து இச்சட்டம் தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்து வருகின்றது. இதனோடு கூடவே 6-வது திருத்தச் சட்டமும் நடைமுறையில் இருந்து வருகிறது. இவ்விரு சட்டங்களும் எமது நாட்டின் இன்றைய சூழலுக்கு எவ்வளவு தூரம் ஏற்புடையது என்பதனை நோக்குவதற்கு சூழ்நிலையை மிகவும் உன்னிப்பாய் அவதானிக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

''தற்போது வட கிழக்கில் நிலவுகின்ற அமைதியென்பது நிரந்தரமானதா? தற்காலிகமானதா? அல்லது சாதாரண யுத்த நிறுத்தம் போன்றதா? என்ற கேள்வி எழுகின்றது. தெற்கில் வன்முறைகள் ஒழிக்கப்படுவிட்டதாக காட்டப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் வட கிழக்கில் மீண்டும் வன்முறைகளையும், பிரச்சனைகளையும், அமைதியின்மையையும் காரணம் காட்டி இச்சட்டத்தினை தொடர்ந்தும் அமுலில் வைத்திருப்பதற்கான சூழல் தோண்றுவதனை நாம் விரும்பவில்லை.

''அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில ஏற்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் மூலமே வட கிழக்கில் அமைதியின் தோற்றம் காணப்படுகிறது. கடந்த கால அரசுகள் விட்ட தவறினைப்போல் இந்த அரசும் உளப்பூர்வமான ஓர் அரசியல் தீர்வினை முன்வைத்து தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்காத வரையில் எதிர் காலத்தில் வட கிழக்கில் அமைதி என்பதனை எதிர்பார்க்க முடியாது.

அண்மையில் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில்; சரியான தீர்வு முன்வைக்கப்படாத பட்சத்தில் வட கிழக்கில் என்ன நடக்குமென்பதனை தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளார் என்றே கருதுகிறேன். எனவே தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளை எதிர் காலத்தில் தீர்க்க அரசாங்கம் ஆயத்தமாகவிருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டும் காலகட்டம் இதுவாகும்.

தற்போதைய இந்திய அரசு இந்தியப் படையின் தோல்வியை ஒப்புக்கொண்டு அதனை திருப்பி அழைத்து நடைமுறையில் தீர்வுக்கான வழியைக் காட்டியுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும், அரசின் அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தைக்கு வந்து, யுத்த நிறுத்தத்தினையும் கடைப்பிடித்து நடைமுறையில்தீர்வுக்காக வழியையும் காட்டி நிற்கிறது. அரசுதமிழீழவிடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்து பிரச்சனைக்கு தீர்வு காண விரும்புகிறது என்கின்ற பொழுதிலும் கூட, தமிழ் பேசும் மக்களுக்கிருக்கின்ற அரசு சார்ந்த நியாயபூர்வமான சந்தேகங்களை நீக்கி நம்பிக்கை ஊட்டுவதற்கான செயற்பாட்டு வடிவங்கள் எதனிலும் அரசு இனனும் இறங்கியதாகத் தெரியவில்லை.

அரசு ஆறுவது திருத்தச்சட்டத்தினை நீக்குவதன் மூலம் தமிழ்பேசும் பக்களின் அபிலாசைகளை புரிந்து கொண்டு காரியமாற்றத்தொடங்கியிருக்கின்றது என்பதை நிரூபித்துக் காட்டமுடியும். ஆறுவது திருத்தச்சட்டத்தை நீக்குவதன் மூலம் தமிழ், சிங்கள, முஸ்லிம்மக்கள் மத்தியில் பரஸ்பர நம்பிக்கையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தமுடியும். இதுவே நிரந்தர அமைதிக்கான அடித்தளமாகக்கூட அமையலாம். இந்தச்சபையில் இருக்கின்ற எந்த அரசியல் கட்சியோ, இலங்கை வாழ் எந்தச் சமூகமோ, தனி மனிதனோ அமைதியை விரும்பாதவர்களாகஇருக்கமுடியாது. எனவே இவ்வரலாற்றுக் கடமையானது தனியே அரசு சார்ந்த விடயமல்ல. அனைத்துஅரசியல் கட்சிகளினதும் கடமையாகும்.

ஆறுவது திருத்தச் சட்டத்தினை வெறுமனே பிரிவினைவாத தடைச் சட்டமாகவோ அல்லது இச்சட்டத்தினை மட்டும் வைத்துக்கொண்டு இந்நாட்டின் ஐக்கியத்தையும், இறைமையையும் பாதுகாக்க முடியுமென்றே நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. ஏனெனில் இச்சட்டமூலத்துக்குள் அடங்கியிருக்கின்ற விடயங்கள் ஓர் இனத்தின் தலைவிதியைப் பற்றியதாகவும், சுயநிர்ணய உரிமை பற்றியதாகவும் இருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கிய மூன்று விடயங்கள் சம்பந்தமாக ஆராய வேண்டியுள்ளது. * தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு, * குடியேற்றத் திட்டங்கள், * தமிழ், முஸ்லிம் உறவு நிலை பற்றியது.

(இதன்போது புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் அண்மையில் பத்திரிகையாளர்களுக்கு விடுத்த அறிக்கையின் முக்கியபகுதிகளை சுட்டிக் காட்டிப்பேசினார்.)

''இவ்வறிக்கையினை கூர்ந்து கவனித்தால் தீர்வுக்காண முயற்சியில் ''தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு'' பற்றி முக்கியகவனம் செலுத்த வேண்டியுள்ளதை இலகுவாக உணரமுடியும்.

''சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்திலிருந்து தமிழ்பேசும் மக்கள் அரசின் குடியேற்றத் திட்டத்தினால் பாதிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். குடியேற்றத்திட்டம்என்பது குடியேற்ற வாசிகளின் எண்ணிக்கையை பொறுத்த விடயமன்று. இது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் குடியமர்த்தப்படுதல், பயிர்ச் செய்கைக் காணிகள், நீர்ப்பாசன வாய்க்கால்கள், குளங்கள், தொழிற்சாலைகள் போன்ற உற்பத்திச்சாதனங்கள் திடீரெனவந்து குடியேறியவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வருவதினால் பாரம்பரியமாக வாழ்ந்து வந்தவர்கள் இதனால் பாதிக்கப்படுதல் என்பதே முக்கிய பிரச்சனையாகின்றது. ஒரு இனத்தின் அடையாளத்தினை அழிக்கின்ற விடயத்தில் அரசு அசிரத்தையாக இருந்தால் வழிவழியே வருகின்ற இனப்பிரச்சனைக்கான தீர்வு என்பது திசை திரும்பிவிடும் ஆபத்துக்கூடாஏற்படலாம்.''

தமிழ் முஸ்லிம் மக்களின் உறவைப்பொறுத் தவரையில் சில காலமாக கிழக்கில் பரஸ்பரம் சந்தேகப்பார்வையே நிலவிவருகின்றது. கடந்தகாலங்களில் இருந்த எந்தவொரு அரசியல்சக்தியும்தங்களுடைய குறிகிய அரசியல்நலன்களுக்காக இவ்விரு சமுதாயங்களினதும் உறவை வலுப்படுத்துவதற்கு பதிலாக முறியடித்தே வந்துள்ளனர் என்பதற்கு வரலாறு சாட்சி பகர்கின்றது. இனப்பிரச்சனைக்கான முழுமையான தீர்வு என்பது இவ் இருசமூகங்களினதும் ஐக்கியத்திலேயே தங்கியுள்ளது எனவே எங்கே ஐக்கியம்குலைகின்றது என்பதனைப் பார்த்திருந்து பயன்படுத்தும் உபாயத்தினை கைவிட்டு இவ்வுறவு பிரிந்து போகவேண்டிய உறவு அல்ல ஐக்கியப்படவேண்டிய உறவு என்பதனை அனைத்து சக்திகளும் உணர்ந்து செயலாற்ற வேண்டும். தேசிய இனப்பிரச்சனைத் தீர்வின்போது வட கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் தனித்துவமான அடையாளங்கள் கவனத்தில் கொள்ளப்படுதல் அவசியமாகும்.

இம்மூன்று பிரச்சனைகளையும் தீர்க்கவிரும்பும் அரசானது முதலில் ஆறுவது திருத்தச் சட்டத்தினை நீக்குவதன் மூலம் நப்பிக்கையான சமிக்கையை காட்டமுடியும் என்றார். (சி)


## எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) நாகர்ஜுன் ★ ராதா ★ ஸ்ரீவித்யா

நியாயத்தை திருடாதே

(ஒறிஜினல்)

(2) ராஜேஸ் ★ சுஜாதா ★ M.N. நம்பியார்

"ஒரு மனைவியின் தீர்ப்பு

(ஒறிஜினல்)

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்


## யாழ்.பல்கலைக்கழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலத்திலிருந்து விவசாய பீடம் அமைப்பதும் இப் பல்கலைக்கழகத்தின் ஒன்றிணைந்த திட்டத்தில் அத்தியாவசியமான பகுதிகளாக இருந்தும் இவை இன்னும் முழுமையாக இயங்கத்தொடங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (து)

## நேர்முகப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேரடியாக அறிவித்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவை உரியவர்களுக்கு கிடைக்காத பட்சத்திலும் பின்வரும் சான்றிதழ்களுடன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

பிறப்புச் சாட்சிப் பத்திரம், கல்விச் சான்றிதழ், கிராம சேவையாளரின் வதிவிடச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ்.

இந் நேர்முகப்பரீட்சைக்கு பெண் விண்ணப்பதாரிகள் நேரில் சமுகம் கொடுக்கத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு சித்திரை மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## யாழ்ப்பாணப் பகுதியில் எரிபொருள் பாவனை அதிகரித்திருப்பதாக மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்தியத்தின் கீழ் இயங்கும் யாழ்ப்பாண பெற்றோலிய (தொகை) சாலையில் 71 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளன. யாழ்ப்பாணம், தீவுப்பகுதிகள். வலிகாமம் பகுதிகள், வடமராட்சி தென்மராட்சியில் சாவகச்சேரி வரை யாழ்ப்பாண பெற்றோலிய சாலையின்கீழ் அடங்குகிறது.

யாழ்ப்பாணம் சாலைக்கு கொழும்பிலிருந்து மாதாந்தம் சுமார் 500,000 லீற்றர் பெற்றோலும் 900,000 லீற்றர் டீசலும், 500,000 லீற்றர் மண்ணெண்ணெய்யும் வருகிறது.

யாழ்ப்பாணம் வழமைக்குத் திரும்பிய காரணத்தினால் விவசாயம், கடற்றொழில், கைத்தொழில், போக்குவரத்துகளில் மக்கள் அதிகளவு ஈடுபடத் தொடங்கியதால் எரிபொருள் பாவனையும் கூடுதலாக இருக்கிறது. அத்துடன் வாகனங்களின் பாவனையும் கூடுதலாகக் காணப்படுவதால் யாழ்ப்பாணப்பகுதியின் எரிபொருள் தேவையை கூட்டுத்தாபனத்தால் பூர்த்திசெய்ய முடியாமல் இருப்பதாக தெரியவருகிறது.

'ரயில்வே வகன்கள்' போதியளவு இல்லாத காரணத்தினாலும், இங்குவரும் ரயில்வே வகன்கள் உரிய நேரத்தில் கொழும்பு செல்லமுடியாத காரணத்தாலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணப் பகுதியில் பெப்ரவரி மாதத்திற்கு பின்னர் எரிபொருள்பாவனை கூடுதலாக இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலைய முகவர்களுக்கு ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 30சதம் கிடைக்கிறது. அத்துடன் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் அல்லது டீசல் விற்றால் 16சதம் கிடைக்கிறதென தெரியவருகிறது. (153)

## விடுதலைப் புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யடுத்து இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் மட்டும் அரசு ஏன் பேச்சுவார்த்தை நடாத்துகிறதென்று கேட்கப்பட்ட கேள்விக்கு அமைச்சர் ரஞ்சன் பதிலளிக்கையில், விடுதலைப்புலிகள் இயக்கத்தைப்போல ஏனைய இயக்கங்கள் அரசில் நம்பிக்கை வைக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

## அபிவிருத்தியில் தமிழீழ ஆய்வு நிறுவனம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனம் வடக்கு கிழக்கின் அபிவிருத்தி வேலைகளில் முனைப்பாக ஈடுபட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி புனர்வாழ்வு சம்பந்தமான துறைகளில் அனுபவமுள்ளவர்களினதும் நிபுணர்களினதும் ஆலோசனைகளையும் ஆக்சபூர்வமான கருத்துக்களையும் பங்களிப்பையும் குறித்த இலக்கினை அடைவதற்கு மேற்படி நிறுவனம் வேண்டிநிற்கின்றது.

பொருளியல்துறை, விவசாயத்துறை, மின்சாரத்துறை மீன்பிடித்துறை. திட்ட அமுலாக்கல் துறை, கைத்தொழில் துறை, வங்கித்துறை, நீர்ப்பாசனத்துறை போன்றனவற்றிற்கான திட்டங்களினை செயல்படுத்த ஆய்வு நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இல. 207, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் மேற்படி நிறுவனத்தின் தலைமையகம் இயங்கிவருகிறது. (து)

## திறந்தவெளி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையே யாழ்.பிராந்திய நிலையத்தில் வகுப்பறை வசதிகள் பற்றாக்குறை காணப்படுவதால் அங்குள்ள கட்டிடத்தின் ஒரு பகுதியை ஆறு வகுப்பறைகளாக மாற்றி அமைக்கும் முயற்சிகள் விரைவில் எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

திறந்தபல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் ஒன்பது துறைகளுக்கானவகுப்புகள்நடைபெற்றுவருகின்றன

யாழ். பிராந்திய நிலையத்தில் காலப்போக்கில் செயல்முறை பயிற்சிகள் நடாத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (153)

## நாளை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வர்த்தக ஊழியர் சங்கக் கூட்டம் நாளை சனிக்கிழமை ஆஸ்பத்திரிவீதியிலுள்ள சங்கரப்பிள்ளை கட்டிடத்தில் திரு. நா. சற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக், யாழ் மாவட்ட கட்சி அமைப்பாளர் திரு. இ. ராஜன், முன்னை நாள் ஊழியர் சங்கத் தலைவரும் தற்போதைய உறுப்பினருமான திரு. வே. தியாகராசா, தற்போதைய உறுப்பினர் திரு. க. நாகலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வார்.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்படவுள்ளதால்சகல வர்த்தக ஊழியர்களும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (து)

## 100 கைதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா அறிவித்துள்ளார் இந்த அறிவித்தலை அடுத்து இன்று 100 கைதிகள் விடுதலைசெய்யப்படுவார்கள்.

## யாழ். பல்தொழில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திய போக்குவரத்துச்சபைத் தலைவரைக் கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த பஸ்சேவைகள் நடைபெற்றால் நூற்றுக்கணக்கான மாணவர்களின் போக்குவரத்து பிரச்சனை தீருமென தெரியவருகிறது. (153)

## நினைவாலயத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கால அபிமானிகளான திரு. சி. கா. சதாசிவம். திரு. சா. ஆ. தர்மரத்தினம், திரு. க. குலசேகரம் ஆகியோர் நேற்றுக்காலை தந்தை செல்வாவின் நினைவாலயத்திற்குச் சென்று மலரஞ்சலி செலுத்தினார்கள். (153)

## தென்னியன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னால் அமைக்கப்பட்ட 9 அடி உயரமான கருங்கற்தூண்கள் காணப்படுகின்றன. அத்துடன் சில தூண்கள் உடைந்து போய் கீழே விழுந்து கிடக்கின்றன. பழையகால செங்கற்கள் பரவலாகக் காணப்படுகின்றன.

கருங்கல்லில் செயற்கையாக உருவாக்கப்பட்ட தூவரமும் காணப்படுகின்றது. கருங்கல்லில் அமைக்கப்பட்ட பீடத்தில் ஐயனார், நந்தி, சிங்கம் போன்ற புடைப்பு சிற்பங்கள் திராவிட சிற்பக்கலை மரபில் அமைக்கப்பட்டுள்ளது.என்றார். (153)